16th December 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் திட்டத்தை இந்த இடங்களுக்கு விஸ்தரித்தால் மட்டும் போதாது. அம்மாதிரி நோய் வராமல் தடுப்பதற்கு நான் சொன்ன மாதிரி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி நடவடிக்கைகள் எடுத்துக்கொண்ட பிற்பாடு அநேகமாக இந்த நோய் இல்லாமல் தடுக்கப்பட்டு விடும்.

SRI A. GOVINDASAMY : குளங்களில் தேங்கியிருக்கும் தண்ணீரை குடிப்பதினால் இந்த வியாதி வருகிறது. தேத்தாங் கொட்டை போட்டு தெளியவைத்து குடித்தாலும் அந்த வியாதி வந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி தேங்கியிருக்கும் தண்ணீரை கிராமத்து மக்கள் குடிக்கவேண்டியிருப்பதால் அந்த வியாதி பரவுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக அந்த இடங்களுக்கு விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரியான நோய் வரக்கூடிய நிலைமை இருக்கிற இடங்களிலே தண்ணீரில் இறங்கி தண்ணீரைத் தொட்டு தண்ணீர் எடுக்காமல், வேறு முறையில் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யும் திட்டம் இருக்கிறது.

The Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Act, 1958.

*224 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மாட்டு வாரம் கையேறு வாரம்தார்கள் பாதுகாப்புச் சட்டத்தை மா நிலம் பூராவும் விஸ்தரிக்கும் திட்டம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்த மாட்டு வாரம் கையேர் வாரம் தார்கள் வேறு மாவட்டங்களில் வேறு பெயர்களில் இருக்கிறார்கள். ஆகையினால், அந்தக் காரணத்தையொட்டி இந்த சட்டத்தை மாநிலம் பூராவும் அமுல் செய்வதற்கு சர்க்கார் முன்வருவார்களா? இதுபற்றி பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மாட்டு வாரம், கையேறு வாரம் என்ற பழக்கம் திருச்சி ஜில்லாவில் ஒரு பகுதியிலே தான் இருக்கிறது. அதுவும் சுமார் 43 கிராமங்களில்தான் இருக்கிறது. மற்ற இடங்களில் வேறு பெயர்களுடன் இருந்தால், அந்தப் பழக்கத்தில் இதிலுள்ள எல்லா அம்சங்களும் இருக்காது, ஒன்று, இரண்டு அம்சங்கள்தான் இருக்கும். இந்த சட்டத்தின் நோக்கம் இம்மாதிரியான வாரம் இருக்கும் இடங்களில்தான் இதை அமுல் செய்யவேண்டும் என்பது. வேறு இடங்களில் வேறு மாதிரியாக இருந்தால், அந்த இடங்களுக்கு இந்த சட்டத்தை விஸ்தரிப்பதற்கு உத்தேசம் இல்லை.